05 வயதிற்கு உட்பட்டவா்களுக்கு 1-3 திருக்குறள்களும் மற்றும் ஆத்திசூடி 1-5
06 வயதினருக்கு 1-4 திருக்குறள்களும் (4 இன் பொருளும்) மற்றும் ஆத்திசூடி 1-8
07 வயதினருக்கு 1-6 திருக்குறள்களும் (4-6 பொருளும்) மற்றும் ஆத்திசூடி 1-11
08 - 09 வயதிற்கு உட்பட்டவா்களுக்கு 1-7 திருக்குறள்களும் (4-7 பொருளும்) மற்றும் தொல்காப்பிய எழுத்ததிகாரம் 1-5
10 - 12 வயதிற்கு உட்பட்டவா்களுக்கு 1-9 திருக்குறள்களும் (4-9 பொருளும்) மற்றும் தொல்காப்பிய எழுத்ததிகாரம் 1-11
13 - 15 வயதிற்கு உட்பட்டவா்களுக்கு 1-11 திருக்குறள்களும் (4-11 பொருளும்) மற்றும் தொல்காப்பிய எழுத்ததிகாரம் 1-13

# திருக்குறள்கள்

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக (குறள் 391)

2. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
   சொல்லாடச் சோர்வு படும் (குறள் 405)

3. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
   ஆன்ற பெருமை தரும் (குறள் 416)

4. ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தன்
   போற்று பவர்க்கும் பொருள். (குறள் 741)

விளக்கம்: பகைவர் மீது படையெடுத்துச் செல்பவர்க்கும் அரண் பயன்படும், பகைவர்க்கு அஞ்சித் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முனைவோர்க்கும் அரண் பயன்படும்

5. ஆங்குஅமைவு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
   வேந்துஅமைவு இல்லாத நாடு (குறள் 740)

விளக்கம்: மேலே சொல்லப்பட்ட எல்லாம் இருந்தாலும் குடிமக்கள் மீது அன்பு இல்லாத அரசு அமைந்துவிட்டால் அதனால் ஒரு நன்மையும் இல்லை.

6. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
   பண்புடை யாளர் தொடர்பு. (குறள் 783)

விளக்கம்: படிக்கும்போது எல்லாம் மகிழ்ச்சி தரும் நூலின் இன்பம்

போல நல்ல குணமுள்ளவரோடு கொண்ட நட்பு
அவரோடு பழகும் போதெல்லாம் மகிழ்ச்சி தரும்.

7. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின் (குறள் 965)

விளக்கம்: நல்ல குடும்பத்தில் பிறந்து மலைபோல உயர்ந்தவரும்கூட தாழ்வானவற்றை ஒரு குன்றிமணி அளவு செய்தாலும் தாழ்ந்து போவார்.

8. மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். (குறள் 942)

விளக்கம்: ஒருவன் முதலில் உண்டது சீரணமாகிவிட்டதை நன்கு அறிந்து அதன் பிறகு உண்டால், அவன் உடம்புக்க மருந்து என்று ஒன்று வேண்டியது இல்லை.

9. நயனொடு நன்றி புரிந்த பயன்உடையார்
பண்புபா ராட்டும் உலகு. (குறள் 994)

விளக்கம்: நீதி வழுவாமல் நன்மைகளைச் செய்து பிறருக்குப் பயன்படப் பணியாற்றுகிறவர்களின் நல்ல பண்பை உலகம் பாராட்டும்

10. பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்.(குறள் 1034)

விளக்கம்: உழுவதால் தானிய வளமும் அதனால் அருளும் உடைய உழவர்கள், தம் ஆட்சியாளர்களின் குடை நிழலை அயலக ஆட்சியாளரின் கீழ் வாழும் மக்களும் விரும்பும்படி செய்வர்.

11. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்
தழுக்கா றிலாத இயல்பு. (குறள் 161)

விளக்கம்: ஒருவன் தன் நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பைத் தனக்கு உரிய ஒழுக்க நெறியாகக் கொண்டு போற்ற வேண்டும்.

ஆத்திசூடி(மகர வருக்கம்)

1. மனம் தடுமாறேல்
2. மாற்றானுக் கிடங்கொடேல்
3. மிகைபடச் சொல்லேல்
4. மீதூண் விரும்பேல்
5. முனைமுகத்து நில்லேல்
6. மூர்க்கரோடு இணங்கேல்
7. மெல்லினல்லாள் தோள்சேர்
8. மேன்மக்கள் சொற்கேள்
9. மைவிழியார் மனையகல்
10. மொழிவது அற மொழி
11. மோகத்தை முனி

தொல்காப்பியம் - தொகைமரபு

1 க ச த ப முதலிய மொழிமேல் தோன்றும்
மெல்லெழுத்து இயற்கை சொல்லிய முறையான்
ங ஞ ந ம என்னும் ஒற்று ஆகும்மே
அன்ன மரபின் மொழிவயினான.

2 ஞ ந ம ய வ எனும் முதல் ஆகு மொழியும்
உயிர் முதல் ஆகிய மொழியும் உளப்பட
அன்றி அனைத்தும் எல்லா வழியும்
நின்ற சொல் முன் இயல்பு ஆகும்மே.

3 அவற்றுள்,
மெல்லெழுத்து இயற்கை உறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி இறுதியான.

4 ண ன என் புள்ளி முன் யாவும் ஞாவும்
வினை ஓரனைய என்மனார் புலவர்.

5 மொழி முதல் ஆகும் எல்லா எழுத்தும்
வரு வழி நின்ற ஆயிரு புள்ளியும்
வேற்றுமை அல் வழித் திரிபு இடன் இலவே.

6 வேற்றுமைக்கண்ணும் வல்லெழுத்து அல் வழி
மேற் கூறு இயற்கை ஆவயினான.

7 ல ன என வரூஉம் புள்ளி முன்னர்
த ந என வரின் ற ன ஆகும்மே.

8 ண ள என் புள்ளி முன் ட ண எனத் தோன்றும்.

9 உயிர் ஈறு ஆகிய முன்னிலைக் கிளவியும்
புள்ளி இறுதி முன்னிலைக் கிளவியும்
இயல்பு ஆகுநவும் உறழ்பு ஆகுநவும் என்று
ஆயீர் இயல வல்லெழுத்து வரினே.

10 ஔ என வரூஉம் உயிர் இறு சொல்லும்
ஞ ந ம வ என்னும் புள்ளி இறுதியும்
குற்றியலுகரத்து இறுதியும் உளப்பட
முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே.

11 உயிர் ஈறு ஆகிய உயர்திணைப் பெயரும்
புள்ளி இறுதி உயர்திணைப் பெயரும்
எல்லா வழியும் இயல்பு என மொழிப.

12 அவற்றுள்,
இகர ஈற்றுப் பெயர் திரிபு இடன் உடைத்தே.

13 அ.ஃ.றிணை விரவுப்பெயர் இயல்புமார் உளவே.